# பதினாறும் அத்தியாயம்

பிரிந்தும் சேர்ந்தும் இருக்கிற பிரகிருதி ஜீவர்களுடைய உண்மை நிலை இன்னது என்றும் ஸத்துவம் முதலிய குணங்களின் கார்யங்களான ஸுகாதிகளில் உண்டாகும் ஆசைதான் பிரகிருதி புருஷர்களின் சேர்க்கைக்குக் காரணம் என்றும்,ஆசை விலகினால் அது விலகி விடும் என்றும்,சேர்ந்திருந்தாலும், பிரிந்திருந்தாலும் அவை இரண்டும் பகவானுடைய சொத்து என்றும்,எந்த விதமான மாறுபாடுமின்றி இருத்தல் எங்கும் சூழ்ந்திருத்தல்,யாவற்றையும் தரித்தல்,யாவற்றுக்கும் ஸ்வாமியாக இருத்தல் என்ற காரணங்களால் அசேதனம்,பத்தன்,முக்தன் என்ற தத்துவங்களைக் காட்டிலும் பகவான் வேறுபட்டுப் புருஷோத்தமனாக விளங்குகிறான் என்றும் கீழ் மூன்று அத்தியாயங்களில் விவரிக்கப் பெற்றன.

சாஸ்திரத்திற்கு உட்பட்டவன் தான் கீழே கூறிய எல்லாச் சங்கதிகளையும் நம்புவான்,சாஸ்திரத்திற்கு வசப்பட்டவன் தெய்வ பிரக்ருதி என்றும் அவன் இவ்விதம் இருப்பான் என்றும்,சாஸ்திரத்திற்கு வசப்படாதவன் ஆஸுர,ப்ரக்ருதி என்றும் அவன் இன்ன மாதிரி இருப்பான் என்றும் பகவான் விளக்குகிறான்.

அர்ஜுன!துக்கத்துக்கான காரணத்தைக் கண்டும் அஞ்சாதிருக்க வேண்டும்.மனத்தில் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் கலவாமல் இருக்க வேண்டும்.பிரகிருதியைவிட வேறான ஆத்மாவின் விவேகத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும்.முடிந்தவரை தானம் செய்ய வேண்டும்.மனத்தை அடக்க வேண்டும். பயனை விரும்பாமல் பகவானை ஆராதிக்க வேண்டும்.எல்லா வேதங்களும் பகவானையும்,அவனுடைய ஆராதனங்களான கர்மங்களையே சொல்லுகின்றன என்று அறிந்து வேதங்களை அப்யஸிக்க வேண்டும். சரீரத்தை உபவாஸாதிகளாலே ஒடுக்க வேண்டும்.மனம்,மொழி,வாக்கு மூன்றும் ஒத்திருக்க வேண்டும். பிறர்களை நலியக் கூடாது.உண்மையை உரைக்க வேண்டும்.பிறர் நலிவுக்குக் காரணமான மனக் கொதிப்பு இல்லாதிருக்க வேண்டும்.அஹிதங்களைச் செய்யாதிருக்க வேண்டும்.வெளி இந்திரியங்களை அடக்க வேண்டும்.பிறருக்கு கேட்டை விளைவிக்கும் கோள் சொல்லுதலைத் தவிர்க்க வேண்டும். பிராணிகளின் துக்கம் கண்டு பொறுதிருத்தல் வேண்டும்.விஷயப் பற்றை ஒழிக்க வேண்டும். நெஞ்சுரப்பின்றி இருத்தல் வேண்டும்.தவறு செய்வதில் வெட்கம் கொள்ள வேண்டும்.விஷயம் அருகில் இருந்தாலும் பற்றில்லாதிருத்தல் வேண்டும்.துர்ஜனங்களைப் புறக்கணிக்கும் ஆற்றல் வேண்டும்.தன் விஷயத்தில் நண்பர்கள் செய்யும் தவறை பொறுத்திருக்க வேண்டும்.பெரிய ஆபத்துக் காலத்திலும் செய்ய வேண்டியவற்றில் விவேகம் நிலைப் பெற்றிருக்க வேண்டும்.உள்–வெளி இந்திரியங்களைச் செயலுக்கு உரியனவாகச் செய்ய வேண்டும்.பிறரை ஸ்வச்சந்தமாகச் செயற்பட வேண்டும்.காரணமின்றி கர்வப்படாதிருக்க வேண்டும்.ஆகிய நற்குணங்கள் என்னுடைய திருவுள்ளப்படி நடக்கும் வகையில் பிறவி பெற்றவர்களுக்கே வருவன ஆகும்.

பிறர் தன்னை தார்மிகன் என்று புகழ வேண்டும் என்ற நோக்குடன் தர்மங்களைச் செய்தல், அவிவேகத்தை உண்டு பண்ணக்கூடியதும்,விஷயாநுபவத்தினால் ஏற்படுவதுமான மதம்,தன் வித்யை,குலம் முதலியவற்றுக்கு பொருந்தாத கர்வம்,பிறரை நலிவதற்கான மனக் கொதிப்பு,நல்லவர்களுக்கு அச்சம் தரும் கடுமை,எது பரதத்துவம்?எவை அவர தத்துவங்களென்பதையும், எதை செய்யலாம்?எதை செய்யக்கூடாது என்பதயும் அறியாமை முதலிய தீய குணங்கள் ஆஸுர ப்ரக்ருதிகளுக்கு உண்டாகக் கூடியவை.

இதைக் கேட்டு வரும் அர்ஜுனனுக்குக் கலக்கம்–மனவருத்தம் உண்டாயிற்று. பகவான் கூறிய பிறவியில் தான் பெற்ற பிறவி எத்தகையது?ஆஸுரப்ரக்ருதியாக தான் இருந்தால் என்ன செய்வது?பகவான் அநுக்கிரகம் பெற முடியாதே?என்று வருந்தலானான்.இதைக் குறிப்பாலுணர்ந்த கிருஷ்ணன் அர்ஜுனனைத் தேற்றுகிறான். தார்மிகர்களில் தலைசிறந்தவனான பாண்டுவின் புத்திரனாகிய

பதினாறும் அத்தியாயம்

உனக்கு அஸுரப்பிறவி எப்படி உண்டாகும். நீ தைவப்ரக்ருதி உள்ளவனே! தைவ ஸம்பத்மோக்ஷத்துக்கு ஸாதகமாகும். ஆஸுர ஸம்பத் அத்யந்தம் ஸம்ஸார பந்தத்திற்கே ஹேதுவாகும். நீ தைவ ஸம்பந்தத்தைப் பெறக்கூடிய வகையிலேயே பிறந்திருக்கிறாய்.

அர்ஜுன! அஸுரப் பிறவியர் ஸம்ஸார மண்டலத்தில் ஸுகத்தை விளைவிப்பதாகச் சாஸ்திரங்களில் கூறப்பெற்றிருக்கும் தர்மங்களையும், மோக்ஷ ஸாதனங்களான தர்மங்களையும் அறிய மாட்டார்கள். அவர்களிடம் உள் வெளிச் சுத்தி இல்லை. அந்தச் சுத்தியை விளைவிக்கும் நித்ய கர்மாநுஷ்டானமும் இல்லை. ஜந்துக்களுக்கு நன்மையைப் பயக்கும் பேச்சைப் பேசவும் மாட்டார்கள். அவர்கள் உண்மையைப் பேசாமல், புறம்பாகவே கண்டபடி பேசுவார்கள்.

இந்த உலகமானது ப்ரஹ்மத்தின் கார்யமாகையால் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டது. ப்ரஹ்மத்தால் தாங்கப் பெறுகிறது; நியமிக்கபடுகிறது என்ற உண்மை நிலைகளை ஆஸுர ப்ரக்ருதிகள் ஏற்பதில்லை. உலகில் காணப்படும் பசு, மனிதன் முதலியவை ஆண், பெண் கலவினால் உண்டானவை என்றும், கலவிக்குக் காரணம் காமம் என்றும் சொல்கின்றனர் ஆஸுர ப்ரக்ருதிகள்.

தெய்வமே இல்லை என்று கொள்கை கொண்டு, ஆத்மாவைக் காணாதவர்களாக, உடம்பு வேறு, ஆத்மா வேறு என்று எளிதில் பகுத்தறியக்கூடிய விவேகம் இல்லாமல் அனைவரையும் ஹிம்ஸித்து உலகின் அழிவிற்கே காரணமாகின்றனர் ஆஸுர ப்ரக்ருதிகள்.

மேலும் எவ்வளவு முயன்றாலும் பெற முடியாத பொருள்களை விரும்பி அவற்றை பெற வேண்டும் என்ற ஆசையினால் அறிவு குறையப் பெற்று அக்கிரமமாக சேர்த்த பொருளைக் கொண்டு சாஸ்திரங்களில் கூறாத சில விரதங்களை மேற்கொண்டு டம்பமும், மானமும், மதமும் உடையவர்களாகச் செயல்களில் முனைகின்றனர்.

இன்றோ நாளையோ சாகப் போகிற சிலர் என்னவோ மனோரதிக்கிறார்கள். இவர்கள் விரும்புவதற்கு அளவே கிடையாது. பெண்டாட்டி முதலியவர்களை அநுபவிப்பதுதான் பரம் புருஷார்த்தம் என்று கருதிகிறவர்கள் இவர்கள். இதற்கு மேற்பட்ட ஸ்வர்க்கம், மோக்ஷம் முதலியவை கிடையாது என்று உறுதி கொண்டவர்கள்.

ஆசைக் கயிறுகளால் கட்டப்பட்டவர்களாகக் காமத்தையும், கோபத்தையும் தக்க உறுதுணைகளாகக் கொண்டு , காதல் மூலமான இன்பங்களுக்குத் தவறான வழிகளில் பணக்குவியலைச் சம்பாதிக்க முயலுகின்றனர் இந்த ஆஸுர ப்ரக்ருதிகள்.

பூமி, புத்திரன் முதலியன என்னாலேயே ஸம்பாதிக்கப் பெற்றுள்ளன. மனோரதிக்கிற சிலவற்றையும் என் திறமையினால் பெறப்போகிறேன். என் வலிமையினால் ஸம்பாதிக்கப் பெற்ற பணம் என்னிடம் உள்ளது. அதைக் கொண்டு மேலும் பணம் கிடைக்கப் போகிறது. பலவானான இந்த சத்துரு என்னால் கொல்லப்பட்டான். மற்ற சத்துருக்களையும் என் பலத்தால் கொல்லப் போகிறேன். நான் ஸ்வதந்த்ரன். ஒருவனுக்கும் உட்பட்டில்லேன். நான் போகங்களை அநுபவிப்பவனாக இருக்கிறேன். எல்லாம் என்னால் தான். அத்ருஷ்டம் முதலியவற்றால் அன்று. எனக்கு இருக்கும் பலமும் ஸுகமும் என்னால் பெறப்பட்டவைதான். நான் பணக்காரனாக இருப்பதும், உயர் குலத்தில் ப்ரந்திருப்பதும், என்னாலேதான். நான் யாகமும் செய்வேன், தானமும் செய்வேன், இன்பங்களை அநுபவிப்பேன் என்று அறிவின்மையால் விசேஷ மோகம் கொண்டிருப்பவர் கருதுகின்றனர்.

## பதினாறும் அத்தியாயம்

அத்ருஷ்டம்,ஈச்வரன் முதலியவற்றின் துணையின்றி நம்மாலேயே எல்லாம் முடியும் என்று கருதி அநேக விஷயங்களில் அலைபாயக்கூடிய மனத்தினால் மோகமாகிற வலையில் சிக்கி மத்தியில் இறந்து நரகத்தில் விழுகின்றனர் இந்த் ஆஸுர ப்ரக்ருதிகள்.

இவர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து பணத்தினாலும்,கல்வியாலும் ஏற்பட்ட கொழுப்பு அதிகமாக இருக்கும்.'தீக்ஷிதன் யஜமானன்' என்று பெயர் ஏற்பட வேண்டும் என்று புகழுக்காக யாகாதிகளைச் செய்வார்கள்.இவர்களுக்கு சாஸ்திரத்தில் நம்பிக்கை இல்லாதபடியால் சாஸ்திரம் கூறியபடி யாகாதிகளைச் செய்யாமல் கண்டபடி செய்வார்கள்.

பிறர் துணையின்றி நானே செய்கிறேன் என்ற அஹங்காரத்தையும் யாவற்றையும் செய்ய என் பலமே போதுமானது என்ற எண்ணத்தையும் ,தனக்கு நிகர் யாருமில்லை என்ற மனோபாவத்தையும் ,எனக்கு இடைஞ்சல் செய்கிறவர்களக் கொன்று விடுவேன் என்ற எண்ணத்தையும் தம் தேகங்களிலும் பிறர் தேகங்களிலும் இருக்கும் புருஷோத்தமனான என்னிடத்தில் மிக்க அஸுயையுடன் என் ஸத்தையையே பொறுக்காதவர்களாக யாகாதிகளைச் செய்கின்றனர்.

கீழே கூறிய வண்ணம் என்னிடம் த்வேஷம் உள்ளவர்களையும், நான் இல்லை என்று ஸாதிப்பவர்களையும்,கோணலான யுக்திகளைச் சொல்லும் மிகக் கொடியவர்களையும் என்னை அறிந்தும் நெருங்காதவர்களையும் ஸம்ஸாரங்களிலேயே தள்ளுகிறேன். அவற்றிலும் ஆஸுரப் பிறவி எடுக்கச் செய்கிறேன்.

ஆஸுர ஜன்மத்தைப் பெற்றவர்கள் பிறவிதோறும் என் விஷ்யத்தில் விபரீத புத்தி வளரப் பெற்று என்னை அடையாமலே,பிறவியிலும் நீசங்களானப் பிறவிப் பெற்று துர்க்கதியை அடைகின்றனர்.

காமம்,க்ரோதம்,லோபம் என்ற இவை மூன்றும் கீழே கூறிய ஆஸுர ஸ்வபாவத்திற்கு மார்க்கங்கள்.இவை ஆத்ம ஸவரூபத்தை அழிக்ககூடியவை.ஆகையால் இவற்றை விட்டு ஒழிக்க வேண்டும்.அஜ்ஞான,விபரீத ஜ்ஞானங்களுக்குக் காரணங்களான காம க்ரோத லோபங்களாகிற இந்த மூன்றிலும் விடுபட்ட மனிதன் தங்க்கு நன்மையைச் செய்கிறான். அதன்மூலம் பரகதியான என்னை அடைகிறான்.

வேதமாகிற என் ஆஜ்ஞையை மீறித் தன் இஷ்டப்படி நடப்பவன் மறுமைப் பலனை அடையமாட்டான்.இங்கும் சுகம் பெறான்.மோக்ஷபலனையும் பெறான்.தன் இஷ்டப்படி நடப்பவனுக்கு எங்கும் எவ்வித ஸுகமும் கிட்டாதாகையால் இந்த இருள்தரும் மாஞாலத்தில் கர்மவச்யனாக இருக்கும் எனக்கு 'இது ஏற்கத்தக்கது,இது ஏற்கத்தகாதது' என்று வ்யவஸ்தை செய்வதில் சாஸ்திரமே பிரமாணம். ஆகையால் சாஸ்திரம் கூறியபடி தெளிவாக அறிந்து கர்மத்தை செய்வதற்குத் தகுதி படைத்துள்ளாய் என்று தன் உபதேசத்தோடு இந்த அத்தியாயத்தை முடிக்கிறான் பகவான்.